**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.71
https://ngmtamil.in/

# இனவரைவியல் நோக்கில் பத்துப்பாட்டு மருத நில மாந்தர்களின் வாழ்வியல்

**முனைவர் பா.மோகன்,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கே.பி.ஆர்.கலை மற்றும் அறிவியல் ஆராய்ச்சிக் கல்லூரி,

அரசூர், கோயமுத்தூர்- 641 407.

**முன்னுரை:**

சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்ள உதவும் வரலாற்றுப்பெட்டகமாக விளங்குகிறது. பண்டைய கால மக்களின் வாழ்வியல் நிலத்திற்கு ஏற்ற வகையில் கட்டமைக்கப்பட்டது. அவ்வாறு வாழ்ந்த மக்களில் மருத நில மாந்தர்களின் வாழ்வியல் மற்ற நிலங்களிலிருந்து ஏற்ற முடையதாகக் காணப்பட்டது. அத்தகு நிலையினை, பத்துப்பாட்டில் மருத நில மாந்தர்களின் வாழ்வியலை இனவரைவியல் நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**மருத நிலமும் மக்களும்**

மனிதன் ஆரம்பகாலத்தில் குறிஞ்சி, முல்லை நிலத்தில் வேட்டை மற்றும் ஆநிரை மேய்த்தலை முதன்மையாகச் செய்தான். பின்னர், அவன் உணவுத் தேவைக்காக மலை நிலத்திலும் கொல்லை நிலத்திலும் உணவுப் பயிர்களைப் பயிர் செய்து வந்தான். அவ்வாறு பயிர் செய்தவன் முல்லை நிலத்தை அடுத்த நிலத்தைப் பண்படுத்தி, நீர்த்தேக்குதலைக் கையாளும் முறையை மேற்கொண்டான். அந்நிலமே பின்னாளில் மருத நிலம் என்றழைக்கப்பட்டது. மருத நிலம் அதிகளவில் உழுது உழுது பண்படுத்தப்பட்டதாலும் நீர் வளத்தாலும் வளம் நிறைந்ததாக விளங்கியது. இந்நிலம் உணவு உற்பத்தியில் முதன்மை பெற்று விளங்கியதால் பொருளாதாரப் பங்கில் தனி இடத்தினைப் பெற்றது. இதனை பெ.மாதையன் அவர்கள், **“இருவேறு வாழ்வு முறைகளிலிருந்து மருதமும் நெய்தலும் வேறுபட்டுப் பொருளாதார மேம்பாடு உடையனவாய் இருந்துள்ளன. உணவு உற்பத்திக்கான அடிப்படை ஆதாரமாய் மருதநிலம் விளங்கியுள்ளது” (சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்,பக்க எண்.12)** என்று குறிப்பிடுகின்றார். மருதநிலம் முதன்மைத் தொழிலாக உழுதலையே கொண்டிருந்தது. அத்தோடு வயல் சார்ந்த பணிகளும் அதிகளவில் இடம்பெற்றன. இந்நிலத்தை ஏர் கொண்டு உழும் மக்கள் உழவர், ஏரோர் என்ற பெயர்களிலும், வயல்களில் பணிசெய்வோர் அரிநர், களமர், வினைஞர் என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டனர். மருத நிலத்திற்குரிய மக்களை வரையறுக்கும் போது நச்சினார்க்கினியர், **“களமர், உழவர், கடையர், உழத்தியர், கடைச்சியர் என்று குலப்பெயராகவும்,**

**மகிழ்நன், ஊரன், மனையோள்" (தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை , பக்க எண்.1)** என்பன தலைமக்கட்குரிய பெயராகவும் பட்டியலிடுகின்றார். மருதநிலத்தின் பொருளாதார உற்பத்தியில் உழவர், களமர் உள்ளிட்டோரின் பங்கு முக்கிய இத்டதைப் பெறுகின்றது. இத்தகு மருதநில மாந்தர்களின் உடற்தோற்றம், இருப்பிடம், தொழில், உணவு முறை உள்ளிட்ட இனவரைவியல் கூறுகள் பின்வருமாறு விளக்கப்படுகின்றது.

**உடற்தோற்றம்**

உழவர்கள் வயல்வெளிகளில் அதிகளவில் பணியினை மேற்கொள்ளும் இயல்புடையவர்கள். அவர்கள் கலப்பையை ஆழ அழுத்தி ஏரினை ஒட்டிச்செல்லும் வலிமையான கைகளையும், அகன்ற தோள்களையும் உடையவர்கள். இவ்வின மக்கள்
இயல்பாக சூரிய ஒளியில் அதிக அளவில் இருப்பதால் கறுத்த உடல் தோற்றத்தினைக் கொண்டிருந்தனர். உழத்தி பிடியின் கையை ஒத்த பின்னல் கிடக்கும் முதுகு புறத்தையும் தொடியணிந்த கையினையும் உடைய உடற்தோற்றத்தோடு காணப்பட்டதைச் சிறுபாணாற்றுப்படையின்,

**"பிடிக்கை அன்ன பின்னுவழ் சிறுபுறத்து,**

**தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப" (சிறுபாணாற்றுப்படை பாடலடி-191-192)**என்ற பாடலடிகள் விளங்குகின்றது. மருதநில பெண்கள் ஒளியுடைய நெற்றியையும், மடமை பொருந்திய நோக்கினையும், ஏற்ற அணிகளையும் அணிந்திருந்த தோற்றக் காட்சியினை,

**"சுடர் நுதல் மட நோக்கின்**

**நேர் இழை மகளின் உணங்கு" (பட்டினப்பாலையின் பாடலடி 21-22)**

என்ற பட்டினப்பாலையின் பாடலடிகள் அவர்களின் செல்வச்செழிப்பை எடுத்துக்காட்டுகின்றன. உழவரின் பிள்ளைகள் இரும்பை தகடாக்கியதை ஒத்த மெல்லிய தோலினையும், நெய்தல் மற்றும் முள்ளிமலரை மாலையாக அணிந்தவர்களாகவும், ஈரும், பேனும் நிறைந்த தலையையும் உடைய உடல் தோற்றத்தோடு விளங்கியதை,

**"களைஞர் தந்த கணைக்கால நெய்தற்**

**கள்கமழ்புதுப்பூ முனையின் முட்சினை**

**...............................................**

**இரும்பு வடித்தன்ன மடியா மென்தோல்**

**கருங்கை வினைஞர் காதலம் சிறாஅர்" (பெரும்பாணாற்றுப்படை பாடலடி 212-223)**

என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. இவ்வாறு மருதநிலத்தில் உழவுத்தொழிலை மேற்கொள்ளும் உழவ மகளிரின் பின்னிய கூந்தல் தொடியணிந்த கை உடைய தோற்றமும் அவர்தம் பிள்ளைகளின் மெல்லிய தோல், சுண்ணம் பூசிய மார்பு உள்ளிட்ட உடற்தோற்றம் உழுதுண்போர் சமுதாயத்தையும், செல்வ மகளிரின் ஒளியுடைய நெற்றி, குளிர்ந்த நோக்கு, அணிகலன்கள் அணிந்த தோற்றம், உழுதுவித்துண்ணும் சமுதாயத்தைச் சார்ந்த பெண் என்பதை அடையாளப்படுத்துகிறது.

**இருப்பிடம்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மருதநில மக்களின் வாழ்க்கை இருநிலைகளில் அமைவதாக இருந்தது. அதாவது நிலமற்றவர்கள் நிலக்கிழார்களிடம் உழவுத்தொழிலை மேற்கொள்வதும், நில உடைமையாளர்கள் உழவுத்தொழிலால் வரும் பொருளால் மாறுபட்ட வாழ்க்கையையும் பொருளாதாரப் பின்னணியும் கொண்டிருந்தனர். இவ்விரு மக்களைக் குறிப்பிடுமிடத்துச் சாமி சிதம்பரனார், **“இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் நிலமற்ற உழவர்கள் இருந்தனர் என்றும் அவர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எனக்கூறி வந்தனர். நிலமுள்ள உழவர்கள் வேளாளர்கள் என்றும் உயர்ந்த வகுப்பினராகச் கருதப்பட்டனர். இவ்விரு வகுப்பினரும் ஒழுக்கத்திலும் நாகரிகத்திலும் பழக்க வழக்கங்களிலும் மாறுபட்டிருந்தனர்” ( சாமிசிதம்பரனார் ,பத்துப்பாட்டும் பண்டைத்தமிழர் வாழ்வும் , பக்க எண்.86)** என்கின்றார்.

மேலும் புலவர் குழந்தை அவர்கள்,

**“உழுதொழில் முட்டின்றி நடத்தற்பொருட்டு, வேளாளரும் உழுதுண்போர்,**
**உழுவித்துண்போர் என இருவகைப்பட்டனர். உழுதுண்போர் - தாமாக நிலத்தை**
**உழுதுண்டு வாழும் உழவுத்தொழிலாளர், இருவகை வேளாளரில் இவர்**
**பெரும்பாலானோர். உழுவித்துண்போர் – உழுதுண்டும் உழவுத்தொழிலாளர்களைக்**
**கொண்டும் தமது நிலத்தை உழுவித்துண்டு வாழ்பவர். இவர் பண்ணையக்காரர்,**
**நிலக்கிழார் எனப் பெயர் பெறுவர்”( புலவர் குழந்தை ,தொல்காப்பியர் காலத்தமிழர் ,பக்க எண்.119)** என்று பதிவு செய்வதில் உழுவித்துண்போரைக் காட்டிலும் உழுதுண்போர் பற்றிய செய்திகள் அதிகளவில் இலக்கியங்களில் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. உழவர்களின் குடில் வைக்கோலால் வேயப்பட்டதாகவும், குடியின் முற்றத்தில் நெல் உள்ளிட்டவற்றை இடிக்கப் பயன்படும் உரல் கிடப்பதாக இருந்ததை,

**“புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்;**
**அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து” (பெரும்பாணாற்றுப்படை பாடலடி 225-226)**

என்ற பாடலடி மூலம் இனவழிசார் சமூகத்தின் புழங்குப் பொருட்களின் பயன்பாடு நோக்கப்பட்டது. உழவர்களின் இல்லத்தின் முன்பு உழவுத்தொழிலுக்குப் பயன்படுகின்ற எருதுகளும் அதன் கன்றுகளும் பெரிய கயிற்றால் கட்டப்பட்டிருக்கும். அங்கு ஏணிக்கு எட்டாத நெடிய வடிவினையும் பழைய நெல்லையும் உடைய நெற்கூடுகள் உயர்ந்து நிற்கும். மருத நிலத்தவர்கள் உணவின் முக்கியக் கூறாக விளங்கும் நெல் அதிகமாக பயிரிடும் காரணத்தால், அவர்கள் பசி வறுமை என்பதை அறியாத குடியினராக விளங்கியதை,

**“தொல் பசி அறியாத் துளங்கா இருக்கை” (பெரும்பாணாற்றுப்படை பாடலடி -253)**

என்ற பாடலடி விளக்குகின்றது. இவ்வாறு மருத நிலத்தில் உழுதுண்ணும் மற்றும் உழுவித்துண்ணும் உழவர்கள் அறுவடையில் எடுத்த வைக்கோலால் குடிலை வேய்ந்ததும் உழவுக்குப் பயன்படுத்தும் காளை கயிற்றில் கட்டிய முன்றிலையும் நெல் உள்ளிட்டவற்றை இடிக்கப் பயன்படும் உரல் உள்ளிட்டவற்றைக் கொண்டதோற்றத்தோடும், பசியறியா குடியாகவும் விளங்கிய கருதாது அறியப்பட்டது.

**தொழில்கள்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மருதநில மக்களின் முக்கியத் தொழிலாக இருந்தது நெல் விளைவித்தலும் அதனை அறுவடை செய்தலுமாகும். தென்னிந்தியப் பகுதிகளில் உணவில் நெற்சோறு முக்கியப்பங்கு வகிக்கிறது. அதனை உருவாக்க உழவர்கள் வயல்களில் பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றனர். அவ்வகையில் நிலத்தை உழுதல், நிலத்தைப்பண்படுத்தல் , நீரிறைத்தல், நாற்று நடுதல், களைபறித்தல், அறுவடை செய்தல் எனப் பல்வேறு பணிகளைச் செய்துள்ளனர். அதன் படிநிலைகள் பின்வருமாறு விளக்கப்படுகிறது.

**நிலத்தை உழுதல்**

மருதநிலம் மற்ற நிலங்களில் இருந்து சிறப்புப் பெற்று விளங்குவதற்கு நிலவளமும், நீர்வளமும் காரணமாகும். நிலவளத்திற்கு உழவுத்தொழில் அடிப்படையாகின்றது. அக்காலத்தில் நிலத்தை உழுவதற்கு இரும்பாலான கலப்பையைப் பயன்படுத்தினர். அதன் அடிப்படையில் நிலத்தை உழுகின்ற உழவர் **செஞ்சால் உழவர்** என்று அழைக்கப்பட்டனர். அதாவது நிலத்தைப் பண்படுத்த பலமுறை உழும் உழவர்கள் இவ்வாறு பெயர் பெற்றனர். செஞ்சால் உழவர்களைப் பற்றி விளக்குமிடத்து பத்துப்பாட்டிற்கு உரையெழுதிய இரா.மோகன் அவர்கள், **“உழவர்கள் ஒருமுறை உழுதலை‟ ஒரு சால் உழவு என்றும் „இருமுறை உழுதலை இரு சால் உழவு என்றும் „பலமுறை உழுதலை‟ செஞ்சால் உழவு ” (பத்துப்பாட்டு பகுதி-1, இரா.மோகன் உரை, பக்க.எண்- 265 )** என்றும் குறிப்பிடுவர்என்று விளக்குகின்றார். உழவர்கள் நிலத்தை உழ நன்கு நடைபயின்ற காளைகளையும், பெண்யானையின் வாயை ஒத்த வளைந்த வாயுடைய கலப்பையும் உடும்பின் முகத்தை ஒத்த கொழுவையும் பயன்படுத்தியதைப் பெரும்பாணாற்றுப்படை,

**“நடை நவில் பெரும்பகடு புதவில் பூட்டி**
**பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடுப்பு முகமுழுக் கொழூழக ஊன்றி” (பெரும்பாணாற்றுப்படை பாடலடி 197-199)**

என்ற பாடலடிகள் வழி வெளிப்படுத்துகிறது. இவ்வாறு மருத நிலவளத்தின் உழுதல் தொழிலுக்கு அடிப்படையான உழவர்கள் நிலத்தை அகல உழுதலோடு ஆழ உழுவதற்காக நன்கு நடைபயின்ற தகுதியான காளைகளையும் கலப்பை மற்றும் கொழு
உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தி நிலத்தை உழுததை அறியமுடிகிறது.

**களை பறித்தல்:**

நாற்று நட்ட வயல்களில் பஞ்சாயக்கோரை, நெய்தல் உள்ளிட்ட புல் வகைகள் வளரும் தன்மை உடையது. களைஞர்கள் நெல் நாற்று நன்கு செழித்து வளர்வதற்காக நெய்தல் உள்ளிட்ட களைகளைப் பறித்ததை, **“களைஞர் தந்த கணைக்கால் நெய்தல்” (பெரும்பாணாற்றுப்படை பாடலடி -213)** என்று பெரும்பாணாற்றுப்படை விளக்குகின்றது. உழவர்கள் வயல்களில் நாற்றுகளுக்கிடையே வளர்ந்த களைகளை நீக்க வன்புலத்தில் களைக்கொட்டு என்ற கருவியைப் பயன்படுத்தியும், மென்புலத்தில் கையால் பறித்தும், பயிர்கள் நன்கு வளர பணி செய்ததை அறியமுடிகின்றது.

**அறுவடை செய்தல்**:

களமர் கழனிகளிடத்து விளைந்த நெற்கதிர்களை அறுக்கும் தொழிலைச் செய்யும் உழவர் இனமக்கள் ஆவர். அவர்கள் அறுத்த்ல் தொழிலுக்குரிய கரும்பினையும், அரிதல்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

தொழிலுக்குரிய நெல்லையும் அறுவடை செய்தனர். அவ்வாறு அறுவடை செய்யும் போது களமர்கள் இசை எழுப்பியதைப் பொருநராற்றுப்படையின்,

**“அறைக் கரும்பின் அரி நெல்லின்**

**இனக் களமர் இசை பெருக” (பொருநராற்றுப்படையின் பாடலடி- 193-194)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. உழத்தியர்கள் தம் உடல் வளைந்து குனிந்து நின்று நெற்றானை அரிவாளால் அரிந்தனர். உழவர்கள் மருத நில வயல்களில் முற்றிய நெற்கதிர்கள் அரிந்து மருத மர நிழலில் போராகப் போட்டு வைத்தனர். அதனை அடித்து, நெற்குவியலில் தூசி முதலியவற்றை கோடைக் காற்றில் தூற்றி மேருமலையை ஒத்த வடிவில் குவித்து வைத்திருந்தனர். இதனைப் பெரும்பாணாற்றுப்படை,

**“பைதுஅற விளைந்த பெருஞ்செஞ்நெல்லின்**

**செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்” (பெரும்பாணாற்றுப்படை பாடலடி- 230-231)**

என்ற அடிகளின் வழி குறிப்பிடுகின்றது. இவ்வாறு வயல்களில் அறுவடை செய்யும் மக்கள் களமர்,அரிநர் என்று அழைக்கப்பட்டதும், அவர்கள் நெல் அரிதலுக்கு அரிவாளைப் பயன்படுத்தியதும், அரிந்த நெற்பயிரை அடித்து தூசியுடைய நெல்லை கோடைக்காற்றில் தூற்றி மூட்டைகளிலும், குதிர்களிலும் பாதுகாத்த செய்தியை அறியமுடிகிறது.

**முடிவுரை**

சங்க காலத்தில் மருத நிலம் மற்ற நிலங்களை விட வளம் நிறைந்த நிலமாக விளங்கியுள்ளது. மருத நிலத்தில் உழவுத்தொழிலை அடிப்படையாக்கொண்ட உழவரின மக்கள் களமர், அரிநர், வினைஞர் என்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உழவுத்தொழிலுக்கு நன்கு நடைபயின்ற காளைகளையும் இரும்பாலான கலப்பையும் பயன்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. உழவர்கள் நிலத்தை உழுதல், நாற்று நடுதல் ,களை பறித்தல், நீர் இறைத்தல், அறுவடை செய்தல் எனப்பல படிநிலைகளில் வேளாண் தொழிலைச் செய்துள்ளதையும், அத்தொழிலால் அவர்கள் பசியறியாக் குடியினராக வாழ்ந்ததையும் இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

[1.] சங்க இலக்கியம் பத்துப்பாட்டு பகுதி 1,2, நியு செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்,

[2.] அம்பத்தூர், சென்னை-600 098, ஐந்தாம் பதிப்பு-2013.

[3.] தொல்காப்பியம் – பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த் நூற்ப்பதிப்புக் கழகம், சென்னை- 600 001.

[4.] பத்துப்பாட்டும் பண்டைத்தமிழர் வாழ்வும்- சாமிசிதம்பரனார்,

[5.] சிவகாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம், சென்னை, முதற்பதிப்பு- 1956.

[6.] 4.தொல்காப்பியர் காலத்தமிழர்- புலவர் குழந்தை, பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு- 2007.

[7.] சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம் ,பெ.மாதையன், நியு செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்,அம்பத்தூர், சென்னை-600 098. இரண்டாம் பதிப்பு- 2010.